

## சைவ சித்தாந்தத்தின் ஒளியை உலகெங்கும் பரப்பிய
# சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் குருபூசை

**சிவதொண்டன்**

### தில்லையம்பலம் சிவயோகபதி

சைவ உலகத்திற்கு அளப்பரிய சிவதொண்டு செய்வதற்கு 1927ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் திகதி வடஅமெரிக்காவில், கலிபோனியாவில் ஜனனம் செய்த ஒரு அவதார புருஷர் எங்கள் குருதேவர் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். அவர் இளம் பராயத்திலேயே தமது பெற்றாரை இழந்து விட்டார். இவரின் பூர்வ புண்ணியவசமாக இருபது வயதிலேயே இவருக்கு ஆன்மீக உதயம் ஏற்பட்டு துறவு நிலைக்கு ஆளாகி விட்டார். உலக பந்தங்களைத் துறந்து பரமசிவ தத்துவங்களின் மகத்துவத்தை உணர்வதற்காகத் தவத்திலும் தியானத்திலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அவரது தூய்மையான யோகப்பயிற்சியினால் அவருக்கு முழுமையான ஞான அறிவு கிட்டியது.

குருவருளைப் பெற்று பின்பு திருவருளை அடையும் பெருநோக்குடன் ஞான புருஷரான குருதேவர் தமது இருபத்திரண்டு வயதில், கொழும்புத்துறையில், மிக எளிமையான முறையில் அன்பர்களுக்கு அருட்கடாட்சம் அருளிவந்த எங்கள் ஞானகுரு சிவயோகசுவாமிகளின் அருட்கண் பார்வையுடன், இளந்துறவியாகிய திருநாள் 1949ம் ஆண்டு வைகாசிப் பூரணை தினமாகிய ஒரு நிறைந்த நாள். அன்றைய தினம் சிவயோகசுவாமிகள் இளந்துறவியாகிய குருதேவருக்குப் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார். தீர்க்கதரிசியான எங்கள் சிவயோகசுவாமிகள் சைவ சித்தாந்த தத்துவங்களையும், சைவக் கோயில்கள் கட்டி எழுப்பும் திருப்பணிகளையும் முறையே உலகெங்கும் பரப்பியும் செயற்படவும் மிகப் பரந்த நோக்குடன் குருதேவரை இனங்கண்டு அந்தப் புனிதமான மிகப்பொறுப்புள்ள சிவதொண்டினைச் செய்யும்படி கட்டளையிட்டு, குருதேவருக்கு அருள் செய்தார்.

குருதேவரும் தமது குருவின் விருப்பப்படி அமெரிக்காவிற்குத் திரும்பி வந்து தனது ஞானகுரு உபதேசித்தபடி சிவப்பணியாக நிறைந்த மனதுடன் நெறி தவறாமல் “இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க” ”மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்” என்ற முழு நம்பிக்கையுடன் கர்ம வீரராகச் செயற்பட ஆரம்பித்தார். உலகம் முழுவதும் வியந்து பாராட்டத்தக்க சிவதொண்டுகள் பல ஆக்கபூர்வமாக செய்தார்.

உலகத்தின் கிழக்கில் இந்தியாவிலே ஒரு புண்ணிய காசிஷேத்திரம் போல், சைவ மக்களுக்கு மேற்கில் அமெரிக்காவில் வைலுவ நதிக்கரையில் அமைந்திருக்கும் குவை சைவ சித்தாந்த ஆச்சிரமும் அங்கு வெகுவிரையில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் சன்மார்க்க இறைவன் கோயில், மிக அற்புதமாக முறைகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதன் திருப்பணிகள் பூரணமாக நிறைவேறுதற்கு உலகெங்கும் வாழும் சைவ மக்கள் யாவரும் குவை சைவசித்தாந்த ஆச்சிரமத்துடன் தொடர்பு கொண்டு நன்கொடையாக நிதி வழங்கி குருதேவருக்கு எங்கள் நன்றிக்கடனைச் செலுத்துவது முக்கிய கடமையாகும்.

சைவ உலகின் ஒளிச்சுடராக விளங்கிய குருதேவர் அவர்கள் 13ம் திகதி நவம்பர் மாதம் 2001ம் ஆண்டில் கனடா நேரப்படி காலை 5:54 மணியளவில் மகா சமாதியாகி சிவனின் பொற்பாதங்களை அடைந்து சிவசோதியுடன் கலந்து கொண்டார்.

ஒரு பொல்லாப்புமில்லை
எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
நாம் ஒன்றுமறியோம்
முழுவதும் உண்மை. -சிவயோக சுவாமிகள்

குருதேவர் சமாதி நிலை அடைந்து எட்டு வருடங்கள் பூர்த்தியாகிய 08 வது மகா குருபூசை, ஐப்பசித் திங்கள் சித்திரை நட்சத்திரமன்று நவம்பர் மாதம், 14ம் திகதி, 2009 ஆகும்.

இந்த நிலையில் சைவசமய அன்பர்கள் யாவரும் எங்கள் நாளாந்த காலை, மாலை கடவுள் வழிபாடுகளிலும், பிரார்த்தனைகளிலும், எங்கள் குருநாதன் சிவயோக சுவாமிகளையும், சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளையும் மனம் கசிந்து வழிபடுவோமாக! எங்கள் நாளாந்த வாழ்க்கையிலும் அவர்கள் காட்டிய வழியில் ஆணவத்தை நீக்கி, ஆன்ம ஈடேற்றத்திற்குச் சிவநாமத்தைச் சொல்லி ஒளிமயமான வாழ்க்கைப் பாதையில் செல்வோமாக!

வாழ்க, வாழ்க சிவயோக குருபரன் திருவடி வாழ்க!
வாழ்க, வாழ்க குருதேவர் திருநாமம் வாழ்க!
வாழ்க, வாழ்க, மேன்மைகொள் சைவநீதி வாழ்க!
வாழ்க, வாழ்க, இவ்வையகம் வாழ்க!

**ஓம் நமசிவாய! ஓம் சாந்தி!**